# நபிகள் நாயகம் ஒரு சரித்திரம்

(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)

வெளியீடு:

மெயில் ஒப் இஸ்லாம் பதிப்பகம்

தமிழ் பிரிவு

# வெளியீட்டாளர் உரை

அஸ்ஸலாமு அலைக்கும்,

மெயில் ஒப் இஸ்லாம் பதிப்பகம் என்பது **WWW.MAILOFISLAM.COM** இணையத்தளத்தின் உத்தியோகப்பூர்வ வெளியீட்டு பிரிவாகும்.

மெயில் ஒப் இஸ்லாம் என்பது ஓர் அரசியல் சார்பற்ற இலாப நோக்கமற்ற உலக இஸ்லாமிய பிரச்சார (த஼வா) அமைப்பாகும்.

மெயில் ஒப் இஸ்லாம் பதிப்பாளர்களாகிய நாங்கள் பல்வேறு மொழிகளிலும் இஸ்லாமிய நூல்களை வெளியிட்டு வருகிறோம். அந்த வரிசையில் எமது தமிழ் பிரிவினால் உருவாக்கப்பட்ட **"நபிகள் நாயகம் ஒரு சரித்திரம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)"** என்ற நூலை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

**தமிழ் பிரிவு**
**மெயில் ஒப் இஸ்லாம் பதிப்பகம்**
திருத்திய பதிப்பு - 18TH MAY 2012
(முதற் பதிப்பு - 14TH APRIL 2010)

எல்லா உரிமையும் வெளியிட்டாளர்களுக்கே
Copyright © 2010 www.mailofislam.com
தொடர்புகளுக்கு - mailofislam@yahoo.com

# பாகம் 1 – ஆரம்ப காலம்

## 1.1 - பிறப்பு

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் யானை வருடம் ரபீஉல் அவ்வல் மாதம் பன்னிரண்டாம் நாள் திங்கட்கிழமை வைகறைப் பொழுதில் பிறந்தார்கள். அதாவது, கி. பி. 20-08-570 ல் ஜனனமானார்கள். எமன் தேசத்து மாகாணதிபதியாகிய அப்ரஹா எனும் கிறிஸ்தவன் ஒரு பெரிய ஹபஷிச் சேனையுடன் பெரிய யானை ஒன்றின் மீது ஏரியவனாய் கஃபதுல்லாஹ் மீது படை எடுத்து வந்தான். இது அப்துல் முத்தலிபின் ஆட்சியின் போது கி.பி. 570ஆம் ஆண்டு நடந்தது. யானை அரபிகளிடத்தில் ஓர் நூதனமான பிராணியாய் இருந்தது. தெய்வீக சோதனையால் அப்ரஹாவின் படை நாசமடைந்தது. இந்நிகழ்ச்சியைக் குறித்து அவ்வருடத்துக்கு அரபிகள் “ஆமுல் பீல்” (யானை வருடம்) என்பர்.

# 1.2 - வளர்ச்சி

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் பிறப்பிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அன்னவர்களின் தகப்பனார் ஸிரியாவிற்கு வியாபாரஞ் செய்யப் புறப்பட்டுப் போகும்போது “யத்ரிப்” எனும் நகரில் நஜ்ஜார் வர்க்கத்தினராகிய அன்னாரின் மாமன்மார்களின் ஸ்தலத்தில் வபாத்தானார்கள். ஐந்து ஒட்டகைகளையும், ஓர் அடிமை பெண்ணையும் தவிர ஏனைய எப்பொருளையும் அவர்கள் விட்டுச் செல்லவில்லை. பட்டணங்களில் வசிக்கும் அக்கால அரபிகள் தங்கள் ஆண் மகவுக்களை, உடல் வலிமை, நற்குணம், நாத்திறன் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக நாட்டுப் புறங்களில் வளர விடுதல் வழக்கம். இதற்கிணங்க அப்துல் முத்தலிப், தன் பேரனை ஸஃதுக்கிளை “துஜல்” மகள் ஹலீமாவிடம் பாலூட்டி வளர்ப்பதற்காக வேண்டி ஒப்படைத்தனர். பால்ய நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் நான்கு வருடமானபோது தங்கள் தாயாரிடம் ஹலீமா நாயகி திருப்பி ஒப்படைத்து விட்டார்.

# 1.3 - தாயின் மறைவு

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் ஆறாம் வயதில் தாயார் ஆமினா "அப்வா" எனும் கிராமத்தில் காலமானார்கள். மக்காவின் தலைவர்களுள் ஒருவராகிய அப்துல் முத்தலிபின் பராமரிப்பின் கீழ் உம்மு ஐமனால் அப்பொழுது அந்த சிறுவர் வளர்க்கப்பட நேர்ந்தது. ஆனால் இந் நிகழ்ச்சிக்கு பின் இரண்டு வருடங்கள் கழித்து அப்துல் முத்தலிப் தமது நூற்று நாற்பதாம் வயதில் காலஞ் செல்ல, அலி (ரலியல்லாஹு அன்ஹு) வின் தகப்பனார் அபூதாலிப் அச்சிறந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றார்.

# 1.4 - முதல் பயணம்

பதின்மூன்றாம் வயதில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் வியாபாரத்திற்காகப் பெரிய தகப்பனார் அபூதாலிபுடன் முதலாவதாக ஸிரியாவுக்குப் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும் பொழுது "புஸ்ரா" என்னும் ஊரில் "புஹைரா" வெனும் கிறிஸ்தவ மதகுரு நபியவர்களில் நபித்துவ அறிகுறிகளை கண்டுபிடித்து அவற்றை அபூதாலிபுக்குக் கூறி "அச்சிறுவனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும்" என்று

கூறினார். இதனை உண்மையென அறிந்த அபூதாலிப் அவ்விடத்திலிருந்து திரும்பி வந்துவிட்டார்கள்.

## 1.5 - இரண்டாம் பயணம்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் இருபத்தைந்தாம் வயதில் மற்றொரு முறை “குவைலித்” எனும் தனவந்தரின் புதல்வியாம் அன்னை கதீஜாவின் வியாபாரப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஸிரியா செல்ல நேர்ந்தது. இம்முறை இடையில் நஸ்தூறா எனும் கிறிஸ்தவ குரு திருநபியைக் கண்டதும் கூறிய கூற்றும், முன்னர் புஹைறாவின் கூற்றை போல் இருந்தது. அதிக இலாபத்துடன் வியாபாரத்தை முடித்துக்கொண்டு திரும்பினர் “உம்மிநபி” அவர்கள். பிரயாணத்தின்போது நிகழ்ந்தவை, நஸ்தூறாவின் கூற்று ஆகியவற்றை கதீஜாவுடன் கூறாது, கூடச் சென்ற “மைஸறா” நிம்மதி காணவில்லை. அத்தனையும் எடுத்து கூறினார். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் மீது கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) வின் அன்புப் பெருக்கு அதிகரித்தது. இத்தகைய அன்புகள் திரண்டு பதிந்தமையே, பின்னர் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) வால் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம்) அன்னவர்களை மணக்கக் கோரப்படக் காரணமானது.

## 1.6 - திருமணம், பிள்ளைகள்

குறிப்பிடப்பட்ட வியாபாரத்தை முடித்துக்கொண்டு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் மக்கா வந்து இரண்டு மாதங்கள் கழிந்து அன்னை கதீஜா பிராட்டியாரை மணந்தனர். பிரபல வியாபாரியாகிய கதீஜா பிராட்டியாருக்கோ அப்போது வயது நாற்பதாயிருந்தது. அது மட்டுமல்லாமல் அதற்கு முன் இரண்டு புருஷர்களுக்கு மனைவியாயிருந்து விதவையுமாயிருந்தார். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கும் அன்னை கதீஜா நாயகிக்கும் மூன்று ஆண்களும், நான்கு பெண்களும் பிறந்தனர். அவர்களின் பெயர்கள் முறையே:- (ஆண்கள்) காஸிம், அப்துல்லாஹ், இப்ராஹிம் என்பவர்களாகும். (பெண்கள்) முறையே: ஸைனப், ருக்கைய்யா, உம்மு குல்தூம், பாத்திமா ஆகியோராம். ஆண் குழந்தைகள் குழந்தைப் பருவத்திலேயே காலஞ்சென்றுவிட்டனர். பெண்கள் ஜீவித்திருந்து கல்யாணஞ் செய்து பிற்காலத்தில் பிதாவின் சிறப்புகளைக் கண்டுகளித்தனர்.

# 1.7 - நம்பிக்கை கொண்டோரின் அன்னையர்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் இருபத்தைந்தாவது வயதில் கதீஜாப் பிராட்டியாரை மணமுடித்த பின் 50 வயது வரை (அதாவது நரை, திரை, மூப்பு எல்லாம் தோன்றும் வரை) முன்னர் இரு புருஷர்களுக்கு மனைவியாயிருந்து விதவையாயிருந்த கதீஜாப் பிராட்டியாருடன் மட்டுமே வாழ்ந்து வந்தனர். பின்னர் அன்னை கதீஜாவின் மறைவிற்கு பின் தமது முதுமை வயதில் சித்தவிகார எண்ணத்தினாலன்றி அன்னவர்களின் பெருந்தன்மையினாலும், அன்பினாலும், நற்குணத்தின் உச்சியைச் சிறு பராயம் தொட்டே எய்தியவர்களாயிருந்ததாலும், பலவழிகளால் இஸ்லாத்துக்கு உதவி பெறுவதற்காகவும், இன்னும் பலவிதமான தகுந்த நியாயங்களுக்காகவும் (அந்த நியாயங்களைச் சுருக்கம் கருதி ஈண்டு நாம் விடுத்தோம்) ஸெளதா, ஆயிஷா, ஹப்ஸா, ரம்லா, உம்மு ஸல்மா, ஸைனப், மைமூனா, ஜுவைரியா, ஸபிய்யா, ரைஹானா ஆகிய பதினொரு பரிசுத்த நாயகிமார்களை மணந்தார்கள். இவர்களுக்கு “உம்மஹாதுல் மு஀மினீன்” அதாவது "விசுவாசிகளின் அன்னையர்" என்று சொல்லப்படும். அவர்களில் ஆயிஷா, மைமூனா, ஸபிய்யா, ஹப்ஸா, உம்முஸல்மா, ஸைனப், ஜுவைரியா, ரம்லா, ஸெளதா ஆகியோர்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் தேகவியோகத்தின்போது ஜீவித்திருந்தனர்.

## 1.8 - கல் வைத்தல்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கு வயது முப்பத்தைந்து நிகழும்போதுதான் சரித்திரப் பிரசித்திவாய்ந்த “ஹஜருல் அஸ்வத்” என்னும் கல்லை உரிய இடத்தில் வைப்பதற்கு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் தீர்ப்பை குறைஷியர் விரும்பிக் கோர அப்படியே செய்தனர். இதுகாலை நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கு “அல் அமீன்” என்னும் சிறப்புப் பெயரை எல்லோரும் வழங்கி வந்தனர். (நம்பத்தக்கவர்) என்பது அதன் பொருள்.

## 1.9 - ஒழுக்கம்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் குணமும், ஒழுக்கமும் மானிடர் மனதில் நினைக்கக்கூடிய எவ்விதத்திலும் மிகச் சிறப்பு வாய்ந்தனவாகும். உண்மை பேசுதல், வாக்குறுதியை நிறைவேற்றுதல், அமானிதத்தைக் காப்பாற்றுதல், அன்பு,

பொறுமை, விசுவாசம் முதலிய நற்குணங்கள் இயற்கையாகவே இவர்களுக்கமைந்திருந்தன. எழுத வாசிக்க அறியாத 'உம்மி' யாகவேயிருந்தது அன்னாருக்கு சிறப்பை இன்னும் அதிகரிக்கச் செய்தது. விக்கிரக ஆராதனையை ஒருபோதும் அவர்கள் செய்ததில்லை, விசுவாசம் முதலிய நற்குணங்களின் காரணமாகத்தான் "அல் அமீன்" (விசுவாசி) என்ற கௌரவப்பட்டத்தை அக்கால ஜனங்கள் அன்னாருக்களித்தனர்.

# பாகம் 2 – நுபுவ்வத் (நபித்துவம்)

## 2.1 - நுபுவ்வத்துக்கு முன் அரபிகள்

நுபுவ்வதுக்கு முன் அரபிகளில் பலர் விக்கிரக ஆராதனைகாரர்களாக இருந்தனர். ஆனாலும் சில நுண்ணறிவு, புத்தி நுட்பமுடையோர் அதைப் பழிப்பவராயிரும் இருந்தனர். உதாரணமாக அரபிகளில் பிரபல பேச்சாளரும், பிரசங்கியுமான “கைஸ் பின் ஸாஇதா” உமரின் சிறிய தகப்பன் “அபூ ஸயீத் பின் ஸெய்த்” “வரக்கத்திப்னு நௌபல்” போன்றவர்களைக் கூறலாம்.

## 2.2 - நுபுவ்வத்தின் பின் அரபிகள்

சின்னஞ் சிறுவராயிருக்கும்போது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தனித்திருப்பதில் விருப்பம். அதற்காக நேரங்களை ஒதுக்கி உலகோரின் சீர்கேடு, அதைத் தவிர்க்கும் வழிவகைகள், இறைவனை பற்றிய தியானம் முதலியவற்றில் சிந்தனையை அடிக்கடி செலுத்துபவராயிருந்தனர். மக்காவிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் “ஹிரா” என்னும் குன்றின் குகைக்கு அடிக்கடி போய்த் தியானித்துக்கொண்டு இலௌகிக பராக்குகளை விட்டொழிந்திருப்பார்கள். நுபுவ்வத்துக்குக் கொஞ்சம் முன்பு

இத்தகைய நிலை அதிகரித்துக்கொண்டு வந்தது. மானசீக இயற்கைத் தத்துவங்கள் சாதாரணமாய் ஒருவரின் நாற்பதாவது வயதில் மிக நல்ல நிலையிலிருக்கும். இவ்வயதில் அநேகமாக ஏனைய தீர்க்க தரிசிகளுக்கும் நபித்துவம் அருளப்பெற்றது. எனவே எம்பிரானுக்கு அப்போது வயது நாற்பது. உண்மையான கனவுகளை ஆரம்பத்தில் காணத் தொடுத்தார்கள். பின்னர் ஜிப்ரீல் என்னும் (மலக்கு) தேவதூதர் மூலமாய் அக்குகையில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தங்கியிருக்கும்போதே முதன்முதலாக அல்லாஹ் பின்வரும் தேவ வாக்கியங்களை அருளினான்.

“உமது இரட்சகனின் திருநாமத்தால் ஓதுவீராக! அவன் தான் (எல்லாம்) படைத்தவன். மானிடனை உதிரக்கட்டியில் நின்றும் படைத்தான். ஓதுவீராக! மேலும் உமது இரட்சகன் மகா கண்ணியமுள்ளவனாக இருக்கின்றான். எழுதுகோலைக் கொண்டு அவன் கற்பித்தான். அறியாதவற்றை மானிடவர்க்கத்துக்கு அவன் படிப்பித்தான்.”

இச்சந்தர்ப்பந்தான் முதன் முதலில் நபிப் பட்டம் இப்பூலகில் வைத்து நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்டதாகும். கதீஜாப்பிராட்டியாரின் பெரிய தகப்பர் “நௌபலின்” மகன் ‘வரகத்’ என்பவர் அக்காலை மக்காவில் வேதங்கள், ஆகமங்கள், சம்பந்தப்பட்ட அறிவால் மிக்க சிறப்புவாய்ந்தவர்

எனப் பிரக்யாதி பெற்றவர். அவரிடம் கதீஜாப்பிராட்டியார் ஓடிப்போய் தன் கணவருக்கு நிகழ்ந்த விஷயத்தை உரைக்க, அவர் பிராட்டியாரைப் பார்த்து “வரக்காவின் ஆத்மா யார் கைவசம் இருக்கிறதோ அந்த நாயனின் மீது ஆணையாய், மூஸாவிடம் வந்துகொண்டிருந்த நாமூஸுல் அக்பர் (நாமூஸென்பது ஜிப்ரீலுக்கொரு பெயர்) உமது கணவரிடம் நிச்சயமாக வந்துவிட்டார், உமது கணவர் ஓர் நபியேயன்றி வேறில்லை” எனப் பகர்ந்தார்.

## 2.3 - அழைத்தல்

அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க ஆரம்பத்தில் இரகசியமாகவும், பின்னர் பகிரங்கமாகவும், இம்மை, மறுமை, இரண்டிலும் நட்பயனளிக்கும் இயற்கை மார்க்கமாகிய இஸ்லாம் மதத்தைப் போதித்தனர்.

## 2.4 - முதல் ஈமான் கொண்டவர்கள்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை நபியாக ஆண்களில் அபூபக்கரும் (ரலியல்லாஹு அன்ஹு), பெண்களில் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) பிராட்டியாரும், சிறுவர்களில் அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களும், அடிமைகளில் ஸைத் (ரலியல்லாஹு அன்ஹு) என்பவரும் முதன் முதலில்

ஈமான் (நன்னம்பிக்கை) கொண்டவர்களாவர். பின்னர் வரவர நன்னம்பிக்கைகொண்டவர் அதிகரித்துக்கொண்டே வந்தனர்.

## 2.5 - அழைக்கும்போது நேர்ந்தது

சுத்த சத்திய சன்மார்க்கத்தின்பால் அழைக்கும் சமயம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் அனுபவித்த கஷ்டங்களும், கவலைகளும் அளப்பரியன. கற்களால் அவர்களின் கூட்டத்தார் அவர்களுக்கு எறிந்து துன்புறுத்தினர். நிகரற்ற அழகுடைய, கஸ்தூரி வாசம் கமழும், பரிசுத்த மேனியில் குப்பைகளை அள்ளிக்கொட்டினர். கனத்த சரசரப்பான புடவையைச் சிறப்பான கழுத்தில் போட்டுத் திருகினர். புன்படுத்தினார்கள். அழுகிய அசூசியான குடலைக்கொண்டு வந்து மாலையாக அன்னாரின் கழுத்தில் போட்டனர். தங்கள் சிறிய மகளாகிய பாத்திமா இதைக் கண்ணுற்றுக் கண்ணீர் மாறி சொரிந்தார்கள். மேலும் அவர்களால் கூடிய எல்லா இன்னல்களையும் விளைவித்து முடித்தனர். கடைசியாக உலக ரட்சகரின் உயிரையே பிடுங்கி எடுக்க முடிவும் செய்தனர். இத்துணைக்கும் நபியவர்கள் கைகொண்ட பொறுமை எனும் ஆயுதம் மிக உதவியாயிருந்தது. சன்மார்க்க அழைப்பைக் கைவிடாது செய்தனர். நம்பிக்கையில் சிறிதும் கலக்கமேற்படவில்லை. கடைசியாக வெற்றியும் பெற்றனர்.

# பாகம் 3 – ஹிஜ்ரத்

## 3.1 - முதலாம் ஹிஜ்ரத்

(ஹிஜ்ரத் என்பது வெறுத்தல்) நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கு மட்டுமல்லாமல் சிஷ்யர்களுக்கும் இன்னல்கள் பல விளைத்தனர். எனவே மக்காவைவிட்டு, 'ஹப்ஷா (அபிஸீனியா) வுக்குச் சென்று விடுமாறு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் சீடர்களுக்கு ஆக்ஞாபித்தார்கள். இது நபித்துவத்தின் பின் ஐந்தாம் ஆண்டு நிகழ்ந்தது. அப்போது அபீதாலிபின் குமாரர் ஜஃபர் (ரலியல்லாஹு அன்ஹு) என்பவர் தலைமையின் கீழ் பத்து ஆண்களும் ஐந்து பெண்களும் சென்று மூன்று மாதம் கழித்து மீண்டனர். ஜஃபரின் (ரலியல்லாஹு அன்ஹு) கரத்தில் "நஜ்ஜாஷி" மன்னர் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார். அன்று நஜ்ஜாஷி மன்னனின் அவையில் ஜஃபரால் (ரலியல்லாஹு அன்ஹு) இஸ்லாத்தின் வர்ணனை எடுத்தோதப்பட்ட விதத்தையிட்டுக் கூறும்பொழுது பிரபல ஐரோப்பிய அரசியல் தந்திரவாதியாகிய குரூமர் பின்வருமாறு கூறுகிறார்:

"கிழக்கிலிருந்து மேற்குவரையுள்ளோர் அத்தனைபேரும் கூடி இஸ்லாமிய மதத்தைப்பற்றி அது இத்தகையதென்று வர்ணிக்குமிடத்து அன்று அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத்துச்

சென்றவர்களின் வர்ணனையை அழகிலும் பொருட்செறிந்த சுருக்கத்திலும் மிகைக்க முடியாது."

## 3.2 - இரண்டாம் ஹிஜ்ரத்

முதலாம் ஹிஜ்ரத்தின் பின் ஹம்ஸாவும் உமறும் இஸ்லாத்தை ஏற்றனர். அப்பொழுது முஸ்லிம்களின் தொகை நாற்பது ஆண்களும் பதினோரு பெண்களுமாவர். உமர் (ரலியல்லாஹு அன்ஹு) இஸ்லாமானதும், முஸ்லிம்கள் முன்னிலும் கூடிய ஊக்கம் பெற்றனர். இதனால் பல வர்க்கத்தினரிடையும் சன்மார்க்கம் துரிதமாய்ப் பரவலானது. இதைக் கண்ணுற்ற குறைஷியர் அஞ்சினர். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை கொல்ல யோசித்தனர். மலைகளால் சூழப்பட்ட ஓர் பள்ளத்தாக்கில் (ஷுஃபு அபீ தாலிப்) ஹாஷிம் வர்க்கத்தினரோடு நபியவர்களைத் தடுத்து வைத்தனர். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் கொல்வதற்கு ஒப்படைக்கும் வரை உணவுப் பொருட்களைத் தடுப்போம் எனத் தடுத்தார்கள். இதையொட்டிய தீர்மானமொன்றைக் கஃபாவில் தொங்கவிட்டனர். இது நபித்துவம் ஏழாம் ஆண்டில் நிகழ்ந்தது. இந்நிலையில் சிஷ்யர்களை மீண்டும் அபீஸீனியாவுக்கு ஏகுமாறு உத்தரவிட்டனர் நபியவர்கள்.

இது இரண்டாம் ஹிஜ்ரத் 83 ஆண்களும் 18 பெண்களும் இந்த ஹிஜ்ரத்தில் பங்குபற்றினர். எமன் தேசத்து “அபூ மூஸா அல் அஷ் அரீயும்” அவரின் குழுவினரும் அதில் கலந்து கொண்டனர். இத்தகைய விதமாய் முற்றுகையிட்டவர்களாய்ச் சுமார் மூன்று வருடங்களாய் நபியவர்கள் இருந்தனர். இரகசியமாய்ச் சிலவேளை சேரும் உணவைத் தவிர மற்ற நேரங்களில் இலைகளைப் புசித்தவர்களாயிருந்தனர். அபூதாலிபின் உதவியுமிருந்தது. கஃபாவில் தொங்கவிடப்பட்ட தாள் கரையானால் அரிக்கப்பட்டு அழிந்து போனது. குறைஷியர் உடன்படிக்கையை முறித்தனர். நபித்துவத்தின் பத்தாம் வருடம் முற்றுகையிலிருந்து வெளிவந்தனர்.

## 3.3 - தாயிபுக்கு ஹிஜ்ரத்

சம்ரட்சணை செய்துகொண்டிருந்த அபீதாலிப் நபித்துவத்தின் பத்தாம் ஆண்டில் காலஞ்செல்லவே குறைஷியரின் அட்டூழியம் மிக்க கடுமையாயது. எனவே தாயிபுக்கு ஹிஜ்ரத்துச் சென்று ஒரு மாதம் கழித்தனர். ‘தகீப்’ கிளையாரைத் தங்களுக்கு உதவிக்கு நபியவர்கள் அழைத்தார்கள். அதற்குக் கிடைத்த பிரதிபலன் கல்லடியும் இரத்த ஒழுக்குமாகும். ‘முத்அம்’ என்பவரின் பாதுகாவலில் மக்கா வந்து சேர்ந்தார்கள் நபியவர்கள்.

# 3.4 - தீமையிழைத்தோரில் பிரசித்தி வாய்ந்தவர்கள்

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கு மிகக் கடுமையான இன்னல்கள் விளைத்தவர்களுள் அபூலஹப், அபூஜஹ்ல், வலீத், உத்பா, ஷைபா ஆகியோர் பிரசித்தி பெற்றவர்கள்.

'அல் இஸ்ரா' (நடுநிசிப் பிரயாணம்), அல்மிஃராஜ் (விண்ணுலக யாத்திரை) எனப்படும் இச் சம்பவங்கள் ஹிஜ்ரத்துக்கு முன் சுமார் பதினாறு மாதங்களுக்கு முன்னர் நிகழ்வுற்றதென நிச்சயிப்பதே மிகப் பொருத்தமானது. (நபித்துவத்தின் பதினோராம் ஆண்டு இறுதி) இந்த யாத்திரை எத்தகையது, ஸ்தூல சரீரத்துடனா, அன்றி ஸூட்சம ஆவி மட்டுமா, அல்லது இரண்டும் சேர்ந்தா என்பவற்றையிட்டுச் சரித்திர ஆசிரியர்களுக்கிடையில் இற்றை நாள் வரை பெரும் பெரும் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. சிலர் அன்றைய மிஃராஜ் நிகழ்ச்சி முழுவதும் ஆண்மலோக (ஆலமே மலகூத்) உவமதறி சனத் தோற்றமாகும் (ஆனால் வெறும் கனவன்று) எனச்சாதிக்கின்றனர். இக் காட்சி நிகழ்ந்தபோது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் கஃபாவின் ஒரு பகுதியான ஹிஜர் என்னுமிடத்தில் நித்திரைக்கும் விழிப்புக்குமிடையே ஒரு மையமான நிலையிலிருந்தார்கள் என்பது புகாரி முஸ்லிமாகிய உண்மைக் கிரந்தங்களிலிருந்தும்

அறியக்கிடைக்கின்றது. இவ்வைபவம் நடந்தது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் ஏனைய நபிமார்களிலும் சிறப்புடையோர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதில் அவர்கள் பைதுல் முகத்திஸையும், விண்ணுலகில் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) முதலிய நபிமார்களையும், சுவர்க்கத்தையும், நரகத்தையும் தரிசித்தனர். அன்று அல்லாஹ்வால் ஐங்காலத் தொழுகை என்னும் அருட்கொடை நபியவர்களுக்கு அளிக்கப்பட்டது.

# பாகம் 4 – இஸ்லாம் பரவுதல்

## 4.1 - மதீனாவில் இஸ்லாம்

நபித்துவத்தின் பதினோராம் வருடம் யாத்திரை காலத்தில் மக்காவிற்கு யாத்திரீகர்களாக வரும் வெளியூர் மக்களுக்குச் சன்மார்க்கத்தைப் போதிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. இதனால் வெளியூரவருள் மதீனா (யத்ரீப்) வாசிகளில் அறுவர் அவ்வருடம் இஸ்லாமைத் தழுவினர். அடுத்த ஆண்டில் பன்னிருவர் நேர்வழியைக் கடைப்பிடித்தனர். அறுதி மானம் செய்து கொண்டனர். இன்னோரின் காரணத்தால் அக்காலை மதீனாவில் எந்த நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் நலவைப் பற்றிப் பேசாதொளிந்ததில்லை. பதின்மூன்றாம் வருடம் எழுபது ஆண்களும் இரு பெண்மணிகளும் நேர்வழியைப் பின்பற்றினர்.

## 4.2 - மதீனாவுக்கு ஹிஜ்ரத்

மீண்டும் குறைஷிகளின் அட்டூழியம் குறைந்தபாடில்லாததையும் மதீனாவில் இஸ்லாம் ஓரளவு பரந்திருத்தளையும் உத்தேசித்து நபியவர்கள் மக்காவிலிருந்த முஸ்லிம்கள் எல்லோருடனும் ஹிஜ்ரத் செல்ல நேர்ந்தது. முதலில் இரகசியமாய் நபியவர்களின் உத்தரவுப்படி மக்காவைத் துறந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் போய்க் கொண்டிருந்தனர். இதையறிந்த குறைஷியர் ஒன்று சேர்ந்து

உலக ரட்சகரின் உயிருக்கு உலை வைக்க முடிவு செய்து கொண்டனர். நபியவர்கள் அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுடன் பகைவரறியா வண்ணம் மக்காவிலிருந்து ரபிஉல் அவ்வல் முதல் தேதி வியாழக்கிழமையில் (கி. பி. 622 - ம் ஜூலை 22 -ம் தேதி) யத்ரிபுக்கு ஹிஜ்ரத்துப் போகத் தொடுத்தார்கள். வெளிப்படும்போது தங்களின் சயனத்தில் மருமகன் அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களைச் சயனிக்குமாறு சொல்ல உடனே தங்கள் ஞானகுருவுக்காக உயிரையே அர்ப்பணம் செய்ய முழு மனத்துடன் ஒப்புக் கொண்டு அங்ஙனம் செய்தார்கள். எதிரிகள் அவ்வில்லத்தை முற்றுகையிட்டுக் கொண்டு நபியவர்களை எல்லோரும் சேர்ந்து ஒரே முறையில் கொல்ல வந்த அத்துணைத் தலைவர்களுகும் தெரியா வண்ணம் தப்பிச் செல்ல அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிந்தான். தௌரெனும் குன்றின் குகையில் மூன்று நாள் மறைந்திருந்தனர். பகைவர் தொடர்ந்து தேடி வந்தனர். குகையில் மறைந்திருக்கும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை கண்டு பிடிப்பது கஷ்டமான விஷயமொன்றல்ல. ஆனால் அவர்களின் தெய்வீகப் பற்றும் அன்னவர்கள் மீது அல்லாஹ்வின் அனுக்கிரகமுமே அன்று அன்னவர்களை காப்பாற்றின. பகைவரின் அச்சம் இன்றெனக் கண்டபொழுது வெளிப்பட்டு ரபிஉல் அவ்வல் பன்னிரண்டாம் தேதி திங்கட்கிழமை 'குபா' என்னும் இடத்தை அடைந்தனர்.

## 4.3 - இஸ்லாத்தின் முதல் குத்பாப் பிரசங்கம்

‘குஃபா’ வில் சில நாள் தங்கியிருந்து அங்கொரு பள்ளிவாயிலும் கட்டினார்கள். இதுதான் இஸ்லாத்தில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களால் முதன் முதல் கட்டப்பட்ட மசூதியாகும். பின்னர் அதைச் சேர்ந்த ‘வாதிஸாலிம்’ என்னுமிடத்தை அடைந்து தோழரோடு தொழுதார்கள். அங்கு இஸ்லாத்தின் முதல் குத்பாப் பிரசங்கத்தை நடத்தினார்கள். மதீனாவில் புகுந்தார்கள். புகுமுன் மதீனாவாசிகள் மிக மரியாதையுடன் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை அரபிக்கீதம் (தலஅல் பத்ரு எனும் கீதம்) பாடியவர்களாய் அழைத்துச் சென்று ஆதரித்தார்கள்.

## 4.4 - யூதரின் பொறாமை

மதீனாவில் இஸ்லாத்தின் சிறப்பைத் கண்ணுறச் சகியாத யூதர்கள், கோபத்தாலும், பொறாமையாலும், நன்னம்பிக்கை கொண்டவர்போல் நடிக்கும் நயவஞ்சகர்களாகிய முனாபிக்குகளின் ஒரு கூட்டத்தைத் தூண்டிவிட்டு முஸ்லிம்களைத் தொந்தரவு செய்தனர். அம்முனாபிக் குலத்தின் தலைவர் ‘அப்துல்லாஹ் இப்னு உபை’ ஆவான். முஸ்லிம்களின் செயல்களை வேவு பார்த்து மக்கத்துக் குறைஷியர்களுக்கு அறிவிப்பர். சுலோகங்கள், சிலேடைக்

கவிகள், பாடிப் பெருமானையும் முஸ்லிம்களையும் நிந்தித்து வந்தனர். பின்னர் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களும் யூதர்களும் முடித்துக் கொண்ட ஒப்பந்தத்தின் பயனாய் அது ஒருவாறு ஒடுங்கியது.

## 4.5 - யுத்தம் விதிக்கப்பட்டது

இதுகாறும் (13 வருடங்களாக), கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைதல், ஆதாரம் காட்டுதல், பொறுமை முதலியவற்றினால் சத்திய சன்மார்க்க அழைப்பு நிகழ்ந்தது. ஆனால் சன்மார்க்கத்தையும் தங்களையும் காப்பாற்றிக்கொள்ள அவை மாத்திரம் போதாமற்போகும் காலம் வர, வாளையுருவும் நிர்ப்பந்தமும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கும் தோழர்களுக்கும் ஏற்பட்டது. அதற்காக முஸ்லிம்களுக்கு யுத்தம் விதிக்கப்பட்டது. நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் பிரசன்னமாயிராத யுத்தங்கள் (ஸரிய்யத்) முப்பத்தைந்தும் பிரசன்னமாயிருந்த யுத்தங்கள் (கஸ்வத்) இருபத்தேழும் நிகழ்ந்தன. உஹுத் யுத்தமும் ஹுனைன் யுத்தத்தின் முதற் பகுதியும் தவிர ஏனைய யுத்தங்களில் முஸ்லிம்கற்கு அல்லாஹ் வெற்றியளித்தான். இருபத்தேழு யுத்தங்களும் காலவொழுங்குப்படி கீழ்க்குறிக்கப்படுகின்றன, (1) வத்தான்

(அல்லது அப்வா ஃ) யுத்தம், (2) ரவ்லாவில் நிகழ்ந்த புவாத் யுத்தம், (3) அஷீரா, (4) முதலாம் பத்று, (5) பெரிய பத்று (6) பனீஸலீம், (7) ஸவீக், (8) கத்பான், (9) நஜ்ரான், (10) உஹுது, (11) ஹம்றாஉல் அஸத், (12) பனீ நுளைர், (13) தாதுர்ரிகா ஃ, (14) கடைசி பத்று, (15) தூமதுல் ஜுன்துல், (16) கந்தக், (17) பனீகுறைளா, (18) பனீலஹ்யான், (19) தீகிறத், (20) பனில் முஸ்தலக், (21) ஹுதைபிய்யா, (22) கைபர், (23) உம்ரதுல் களா, (24) மக்காவைக் கைப்பற்றுதல், (25) ஹுனைன், (26) தாயிப்), (27) தபூக்.

பிரசன்னமாயிருந்தது மாத்திரமின்றி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் சண்டை செய்த யுத்தங்கள் ஒன்பது. அவை: இரண்டு பத்று, உஹுது, கந்தக், குறைளா, முஸ்தலக், கைபர், ஹுனைன், தாயிப் என்பனவாம்.

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் சந்தையிலும் திருவிழாக்களிலும் இஸ்லாமிய பிரசாரம் செய்து அதைப் பரப்ப முயற்சித்தார்கள். அதனால் அதிக வெளியூர் வாசிகள் இஸ்லாமைத் தழுவினர். மதீனாவாசிகள் சன்மார்க்கத்தைத் தழுவியது இஸ்லாம் பரவுவதற்கு மிகவும் முக்கியமான ஒரு காரணம்.

# பாகம் 5 – முக்கிய யுத்தங்கள்

## 5.1 - பெரிய பத்று யுத்தம்

ஹிஜ்ரத் இரண்டாம் ஆண்டில் ரமலான் மாதம் 17ம் தேதி இந்த யுத்தம் நடந்தது. முஸ்லிம்கள் 313 பேர்களும், பகைவரில் 1000 குறைஷிகளும் இதில் கலந்துகொண்டனர். உண்மைக்கும் உண்மையல்லாததற்கும் இடையில் பிரிக்கும் எல்லையாயிருந்தது இச்சண்டை. முஸ்லிம்கள் அன்று ஜயித்தார்கள். கொஞ்சப்பேர்களாகிய முஸ்லிம்கள் அதில் தோற்றிருந்தால் இஸ்லாம் மதத்தின் நிலை என்னவாயிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். மானுஷீக சக்தியாலன்றித் தெய்வீக பக்தியாலேயே இது வெல்லப்பட்டது. குறைஷியர்களில் 70 வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். அபூஜஹ்ல், உத்பா, உமையா, வலீத் உட்பட மற்றும் 70 பிரசித்திபெற்ற குறைஷித் தலைவர்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களில் கொல்லப்பட்டவர் தொகை 12க்குக் கூடவில்லை. பத்று என்பது மக்காவிற்கும், மதீனாவிற்கும் இடையிலுள்ள ஓர் சிற்றூர். அதற்குச் சமீபத்தில் இந்த யுத்தம் நிகழ்ந்ததனால் பத்று யுத்தமென்றனர். காரணம் தங்களின் எல்லாப் பொருட்களையும் பறிகொடுத்துவிட்டு மதீனா வந்து வறுமையால் வாடும் முஹாஜிர்கள், அபூஸுப்யானின் தலைமையில் வியாபாரத்திற்காக ஸிரியா சென்று திரும்பும் குறைஷியரிடம் பழிக்குப் பழிவாங்க எண்ணங்கொண்டனர்.

மதீனாவிலிருந்த, முன் கூறப்பட்ட நயவஞ்சகர்கள் அபூஸுப்யானுக்குச் செய்தியை அறிவித்துவிட்டனர். அபூஸுப்யான் மக்காவிற்கு நிருபமெழுத, அங்கிருந்த அபூஜஹ்ல், உத்பா, உமையா முதலியோர் 1000 போர் வீரருடன் முஸ்லிம்களையும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களையும் சம்ஹாரம் செய்ய வந்தனர். குறைஷியரின் இச்செய்தியை அனைவரின் வேலைக்காரர் சிலரின் மூலம் அறிந்த நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் 313 தோழர்களுடன் பத்ரில் பாலையமிட்டனர். யுத்தத்தில் முஸ்லிம்களால் சிறை பிடிக்கப்பட்டோர்களில் இரு வகுப்பினர் இருந்தனர். ஒன்று பணக்காரரைக் கொண்டது. மற்றது ஏழைகளைக் கொண்டது. சீமான்களை அன்னவரின் இனத்தவர் பணம் கொடுத்து மீட்டிச் செல்பவராயிருந்தனர். ஏழைக் கைதிகளையிட்டு முஸ்லிம்கள் செய்ததானது, அந்த இஸ்லாமிய அரபிகளின், கேதியான சீர்திருத்த நிலையை எடுத்துக்காட்டுகிறது. அவர்கள் என்ன செய்தனரெனின், ஏழைக் கைதிகளில் ஒவ்வொருவனும் மதீனாவின் சிறார்களில் பதின்மருக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுத்துவிட்டால் அவனுக்குச் சுதந்திரமளித்தனர். இஸ்லாம், முதல் நூற்றாண்டிலேயே எய்திய நாகரீகத்தைப் போன்று 20ம் நூற்றாண்டிலும் ஐரோப்பா அந்நிலையை அடையவில்லையென்று இதனால் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

# 5.2 - கத்பான் போர்

கத்பான் யுத்தம் ஹிஜ்ரத் 3ஆம் வருடம் நிகழ்ந்தது. முக்கியமான ஓர் யுத்தமல்லாவிடினும் அதில் நிகழ்ந்தவோர் ஆச்சரிய சம்பவத்திற்காக அதை எழுதுகிறோம். தஃதூர் இப்னு ஹாரித் என்பவரின் தலைமையில் தஃலபா கிளையினரின் 450 வீரர் மதீனாவைத் தாக்க வெளிப்பட்டனர். இதையறிந்து நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களும் சில தோழர்களோடு தற்காப்பிற்காக ஆயத்தமாகிப் பகைவர்களை 'கத்பானில்' சந்தித்தார்கள். ஆனால் விரோதிகள் மலைகளில் ஓடிப்போய் பதுங்கி விட்டனர். இவ்யுத்தத்தில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தங்கள் ஈரமான மேலாடையை அவிழ்த்து உலர ஒழுங்கு செய்துவிட்டுத் தனிமையாய் ஓர் மரநிழலில் சாய்ந்துகொண்டிருந்தனர். அச்சமயம் திடீரென்று 'தஃதூர்' என்பவன் உருவிய வாளுடன் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களைக் கொல்லுவதற்கு ஓடோடி வந்து "இப்பொழுது என் கரத்திலிருந்து உம்மைத் காப்பாற்றுபவர் யார்?" எனப் பயங்கரத் தொனியில் கர்ஜித்தான். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் "அல்லாஹ்தான்" என்று கூறிய மறுமொழியின் பாங்கைச் செவியுற்ற தஃதூறுக்கு ஒருவித அதிர்ச்சியும்

திடுக்கமும் உண்டாகிக் கையிலிருந்த வாள் கீழே விழுந்து விட்டது. அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் அவ்வாளைக் கையிலெடுத்துக்கொண்டு, "இப்பொழுது என் கரத்திலிருந்து உம்மைக் காப்பாற்றுபவர் யார்?" என்று வினவ, அவன் "ஒருவருமில்லை" என்று பதில் சொன்னான். அவனைத் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் மன்னித்துவிட்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் நற்குணத்தின் காரணமாக அவன் இஸ்லாத்தைத் தழுவியது மட்டுமன்றி அவன் கூட்டத்தினரையும் அவனே இஸ்லாத்துக்கு அழைக்கலானான்.

## 5.3 - உஹுதுப் போர்

உஹுது என்பது மதீனாவிலிருந்து மூன்று மைல்களுக்கப்பால் உள்ள ஒரு மலை. அவ்விடத்தில்தான் இவ்யுத்தம் நேர்ந்தது. பத்ரில் அடைந்த தோல்விக்குப் பழிவாங்குவதற்காக வேண்டிச் சுமார் 3000 வீரர்களைத் திரட்டிக்கொண்டு 200 குதிரைகள், சுமார் 2000 ஒட்டகங்களுடன் மிகப்பெரிய சேனையாய்க் குறைஷியர், ஹிஜ்ரத் மூன்றாம் ஆண்டில் வந்தனர். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின்

பெரிய தகப்பனார் ‘அப்பாஸ்’ அனுப்பிய தூதனால் இதையறிந்தே நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் 700 வீரருடன் உஹுதையடைந்தனர். (1000 பேரில் 300 நயவஞ்சகர் நழுவி விட்டனர்) அங்குள்ள சிறிய குன்றின் மேல் 50 அம்பு வீரரை அணிவகுத்து எதுவரினும் இடம் பெயராதிருக்க வேண்டுமென ஆக்ஞாபித்து மற்றோரை முன்னணிகளில் நிறுத்தினார்கள். குறைஷியரில் அபூஜஹ்ல் மகன் இக்ரிமா, காலிதிபுனு வலீத், அம்ரிபுனு ஆஸ் ஆகியோர் ஒவ்வொரு பகுதிக்குச் சேனைத் தலைவராயிருந்தனர். ஹிஜ்ரத் மூன்று ஷவ்வால் 15 இல் சண்டை ஆரம்பமானது. முஸ்லிம்கள் வெற்றி கொண்டனர். குறைஷியர் பின்வாங்கி ஓட முஸ்லிம்கள் சூறையாடத் தொடங்கினர். குன்றிலிருந்த அம்பு வீரரும் இதைக் கண்ணுற்று, நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் ஆக்ஞையைக் கூட மறந்து கொள்ளைப் பொருள் சேர்க்கச் சென்றனர். இந்தச் சந்தர்ப்பத்தைக் காலித் பயன்படுத்தி முஸ்லிம்களைத் தாக்க, முஸ்லிம் வீரர்கள் பின்வாங்கினர். ஹம்ஸா (ரலியல்லாஹு அன்ஹு) துவஜாதிபதி முஸ்அப் (ரலியல்லாஹு அன்ஹு) உட்பட 70 முஸ்லிம் வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் காபிர்களில் மடிந்தோர் முப்பத்து மூவராவர். கீழ் உதட்டில் ஓரம் புதைக்க, நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் பல்லொன்று உடைந்தது. இப்னு காமியா வெனும் குறைஷிக்

காபிர் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களை வெட்ட, அதனை தல்ஹா பின் உபைதுல்லா கையால் தட்டி காப்பாற்ற அவர் விரல்கள் அறுந்தன. அபூஸுப்யான் குன்றின் மீதேறி ஓ முஹம்மதே! ஓ அபூபக்கரே! ஓ உமரே!" எனக் கத்தினான். பதிலில்லாததால் எல்லோரும் மாண்டனர் என்று ஏளனமாகச் சொன்னான். உடனே உமர் (ரலியல்லாஹு அன்ஹு) எழுந்து "அல்லாஹ்வின் துரோகியே! எல்லோரும் உயிருடனிருக்கின்றோம்." என்றனர். குறைஷியர் பின் மக்காவிற்குத் திரும்பினர்.

**தோல்விக்குக் காரணங்கள்:-**

(1) தளபதியின் ஆக்ஞையை மறந்தமை.
(2) 'ஔஸ், கஸ்ரஜ்' கோத்திரத்தவர் ஹிஜ்ரத்துக்கு முன் நடந்த சில விஷயங்களுக்காகப் பழிக்குப் பழி வாங்க எத்தனித்தமை (உம்மு ஹாரிஸ் முஜத்தரைக் கொன்றமை)

## 5.4 - அகழி யுத்தம்

('அஹ்ஸாப்' என்றும் சொல்லப்படும்) ஹிஜ்ரத் ஐந்தாம் ஆண்டில் துல்கஃதா மாதம் நிகழ்ந்த ஓர் பிரதான யுத்தம் இது. தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட யஹூதிகள்

தூண்டுதலால், குறைஷிகள், நாட்டறபிகள் (பதவிகள்) யஹூதிகள், ஹபசிகள், ஆதியோர் அடங்கிய 10,000 போர் வீரர்கொண்ட ஒரு கூட்டுச் சைனியம் அபூஸுப்யான் தலைமையில் புறப்பட்டு மதீனாவுக்கு வருவதைச் செவியுற்ற நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள், தோழர்களோடு கலந்தாலோசித்து, அம்மகா பெரிய சேனையோடு யுத்தம் புரிய மதீனாவுக்கு வெளியே செல்லலாகாதென்று, ஸல்மானுல் பாரிஸீயின் அபிப்பிராயத்திற்கிணங்க ஓர் அகழியை 6 நாட்களில் தோண்டி முடித்தனர். 3,000 பேர்கொண்ட சேனை மதீனாவைப் பாதுகாத்தது. அகழிக்குத் தெற்கே அணிவகுத்து நின்றது அபூஸுப்யானின் கூட்டுச்சேனை. முஸ்லிம் வீரர் அம்புமாரி பொழிந்து அகழியைக் காத்தனர். சுமார் 15 நாள் முற்றுகை நீடித்தது. பின்னர் அல்லாஹ் அருளால் புயல் காற்றோடு கடும் மழையும் பெய்தது. பகைவர்களின் குதிரைகளும், ஒட்டகங்களும் மாண்டு மாய்ந்தன. சேனையுள் நோய் பரவிற்று. இன்னல்களைச் சகிக்கொணாது, வந்த வழியே சென்றது கூட்டுச் சேனை. ஒப்பந்தத்தை மீறி இராஜ துரோகம் செய்த பனீகுறைளா யூதர்களில் 600 பேர்கள், அவர்கள் தலைவன் ஸஃதிபுனு முஆவின் தீர்ப்பின்படி கொல்லப்பட்டனர். மதீனாவில் ஓர் அகழி தோண்டி அதில் அன்னோர் எறியப்பட்டனர்.

## 5.5 - கைபர்

ஹிஜ்ரத் 7 ம் ஆண்டு யஹூதிகள் குடியிருப்பான கைபர்பதி, நபியவர்களுடன் 1600 முஸ்லிம் வீரர்களால் 6 நாட்களாய் முற்றுகையிடப்பட்டு 7ம் நாள் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டது. அதில் யஹூதிகள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டனர். கைபரின் யூதர்கள்தான் அகழி யுத்த நாட்களில் கூட்டுச் சேனையைத் தூண்டிவிட்டார்கள். மேலும் யூதர்கள் நயவஞ்சகர்களைத் துணையாகக்கொண்டு முஸ்லிம்களை அழிக்கத்தலைப்பட்டார்கள். இத்துடன் யூதரின் தொந்தரவு ஒருவாறு அடங்கியது. பின்னர் நயவஞ்சகர் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை இறந்தான். இனி இவர்களின் விரோதமும் ஒழிந்தது. அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கைபர் சண்டையில் மிகவும் கஷ்டமடைந்தார்கள்.

## 5.6 - முஃதாவின் போர்

முஃதாவின் சம்வத்திற்குத் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் பிரசன்னமாகாது போனாலும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் முஸ்லிம் சேனைகளுக்கு சில பெறுமதி மிக்க பொன்மொழிகளான போதனைகள் செய்தமையால் இதனையும் இங்கு எழுதுகிறோம். 3000 போர்

வீரர்களைத் தயாரித்து நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் ஸைதிப்னு ஹாரிதாவைத் தலைவராக்கி புஸ்ராவின் (ஏர்சலீமுக்குச் சமீபமாய்) ஓர் சிற்றரசனோடு சண்டை செய்ய அனுப்பினார்கள். ஏனெனில், சிற்றரசன் அதற்குமுன் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களால் அனுப்பப்பட்ட தூதரைக் கொலை புரிந்து பல சபதங்களும் கூறியிருந்தான். எனவே, அதற்காக ஹிஜ்ரத் 8ம் வருடம் முன் கூறப்பட்ட சேனையை ஆயத்தப்படுத்தி, அவர்களுக்கு இக்காலத்திலும் சேனைகளுக்கு உபதேசிப்பதற்கு மிக பயன் தரக்கூடியவையான சில ஒப்பற்ற உபதேசங்களை புரிந்தனர். அவற்றில் சில:

- “**கோயில்களில்** தஞ்சம் புகுந்துள்ள மக்களை துன்புறுத்தாதீர்கள்.
- “**பெண்களைக்** கொலை செய்யாதீர்கள்.”
- “**சிறுவர்களை** கொலை செய்யாதீர்கள்.”
- “**வயோதிபர்களை** கொலை செய்யாதீர்கள்.”
- “**பசுமரங்களை** வெட்டாதீர்கள்.”

என்பனவாம். முஸ்லிம் அரபிச்சேனை மு:தாவிற்கு வந்தடைந்ததும் அங்கு ரூம் தேசத்தவரின் இரண்டு இலட்சம் கொண்ட பிரமாண்டமானவோர் படை திரண்டு நிற்பதைக் கண்டனர். தைரியமாய் யுத்தம் புரிந்தனர். முஸ்லிம் சேனைத்தலைவர் ஸைத் (ரலியல்லாஹு அன்ஹு) கொல்லப்பட்டார். பின்னர் ஜ:பர் இப்னு அபீதாலிப் (ரலியல்லாஹு அன்ஹு) தலைமைத் பதவி ஏற்று நடத்தினார். கொடியை ஏந்தியிருந்த அன்னாரின் வலக்கை பகைவரால் முறிக்கப்பட இடக்கையால் கொடியைத் தாங்கிக்கொண்டு நடத்தினார். அதுவும் வெட்டப்பட்டு பின்னர் அவர்களும் கொல்லப்பட்டார்கள். கடைசியாகக் காலித் இப்னு வலீத் (ரலியல்லாஹு அன்ஹு) (இப்போது இவர் ஓர் உண்மை முஸ்லிம்) தலைமை தாங்கினார். அன்னாரின் போர் நடத்தும் திறனால் அராபிய முஸ்லிம் சேனை காப்பாற்றப்பட்டது.

## 5.7 - ஹுதைபிய்யா உடன்படிக்கை

ஹிஜ்ரத் ஆறாம் ஆண்டில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் உம்ராவெனும் வணக்கத்தை நிறைவேற்ற வேண்டி பிரணியின் வாளைத்தவிர வேறு ஆயுதமும் இல்லாமல் 1500 சகாக்களுடன் மக்கமா நகரை நோக்கிப் புறப்பட்டனர்.

ஹுதைபிய்யாவை அடைந்ததும் (ஹுதைபிய்யா என்பது மக்காவிலிருந்து சிறிது தூரத்திலிருக்கும் ஒரு கிணறு) அன்னவர்களை மக்காவினுள் புகவிடாமல் தடுத்துப் போர் புரிவதற்காக குறைஷியர் தயாராகி வந்தனர். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தாம் கஃபாவைத் தரிசிக்கவேயன்றிப் போர் புரியும் நோக்கத்தோடு இங்கு வரவில்லை என்று குறைஷியர்க்குக் கூற அங்கு இருத்தரப்பினருக்குமிடையே சில நிபந்தனைகள் அடங்கிய ஓர் உடன்படிக்கை எற்படலாயிற்று. அது ஹுதைபிய்யா உடன்படிக்கை எனப்படும். ஹுதைபிய்யாவில் சில நாட்கள் தங்கியிருந்து பின்னர் மக்கா செல்லாது மதீனாவிற்குத் திரும்பினர்.

**நிபந்தனைகள்:-**

1. “பத்து வருடங்கள் வரை இரு சாராரும் போர் புரிவதில்லை.
2. எத்தகைய அச்சமுமின்றி இரு தரப்பினரும் நாட்டில் வாழ வேண்டும்.
3. முஸ்லிம்கள் இவ்வருடம் மக்காவிற் பிரவேசிக்கக்கூடாது. அடுத்த வருடம் மக்காவுக்கு வரும்போது நிராயுதபாணிகளாக வந்து மூன்று தினங்கள் தங்கியிருக்கலாம். அம்மூன்று தினங்களிலும் குறைஷியர் வெளியே சென்று விடுவர்.
4. குறைஷியரில் எவரேனும் உத்தரவின்றி மதீனாவுக்கு வந்து விட்டால் அவர் திருப்பி அனுப்பப்பட வேண்டும். அதற்கு மாறாய் முஸ்லிம்களில் எவரேனும்

குறைஷிகளில் வந்துவிட்டால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள்.

5. இரு கட்சியினரும் தத்தமக்குரிய வேறு கோத்திரத்தாருடனே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம். ஆனால், குறைஷியரின் நண்பர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது. அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களையும் குறைஷியர் தாக்குவது தகாது.”

## 5.8 - மன்னர்களை இஸ்லாத்துக்கு அழைத்தல்

அரேபியாவின் நானாபக்கங்களிலும் இஸ்லாமிய ஒளிபறந்து பிரகாசித்துக் கொண்டிருப்பதை அறிந்த நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் பிற நாடுகளிலுள்ள அக்காலத்து ஏனைய அரசர்களையும் இஸ்லாமளவில் அழைத்தனர். தகுந்த தூதுவர்களிடம் கடிதங்களை கொடுத்து ரூம் தேசக் கைஸரிடம் ஒருவரும், டமஸ்கஸை ஆண்டு கொண்டிருந்த கஸ்ஸான் கொத்திரத்து முந்திறு என்பானிடம் ஒரு தூதுவரும், மிஸ்ரின் அதிபதியான முகௌகஸ் இடம் ஒரு தூதுவரும், பாரசீக மன்னரான கிஸ்றாவிடம் ஒரு தூதரும், அபிஸீனிய மன்னரிடம் ஒரு தூதரும், பஹ்ரைனின் அரசரிடம் ஒரு தூதரும், அம்மானின் இரு இராசரிடம் ஒரு தூதரும், யமாமாவின் அரசரிடம் ஒரு தூதருமாகச் சென்றனர்.

ஆனால், பஹ்றைன் அரசரும் அம்மானின் இரண்டு அரசரையும் தவிர ஏனையோர் அப்பொழுது இஸ்லாமைக் கைக்கொள்ளவில்லை. ஏனைய அரசருள் பாரசீக ஷாஹ் என்பவர் தூதரின் நிருபத்தை எடுத்துத் துண்டு துண்டாய்க் கிழித்து விட்டதோடு அவரைக் கடுமையாய் அவமானமும் படுத்தினான். ரூம் தேசக் கைஸர் தூதுவரை வரவேற்று மரியாதை செய்து அனுப்பினான். முகௌகஸ் என்னும் மிஸ்றுத் தேசாதிபதி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்குச் சில நன்கொடைகளும், மாரியா வெனும் கிபுதி அடிமைப் பெண்ணையும் அனுப்பி வைத்தார். டமஸ்கஸின் அரசன் தூதுவரை ஒரேயடியாகக் கொன்றுவிட்டான்.

## 5.9 - குறைஷியர் உடன்படிக்கையை மீறல்

ஹுதைபிய்யா உடன்படிக்கை எழுதப்பட்டு இரண்டவதாண்டில் குறைஷியரின் நேசக் கூட்டத்தினராகிய பக்ர் வம்சத்தினர் சிலர் முஸ்லிம்களின் நேசக கூட்டத்தினராகிய 'குஸாஆ' வர்க்கத்தவரை அகாரணமாய்த் தாக்கிக் கஃபாவெனும் தேவாலயத்துள்ளும் துரத்திச் சென்று ஒரு சிலரை படுகொலையும் செய்தனர். அதுகாலை குறைஷியர்களும் தங்கள் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களின் நேயர்களைத் தாக்கினர். இதற்குரிய

காரணம் யாதென வினவியபோது அம்மக்கா வாசிகள் திருப்திகரமான காரணம் கூறாது முஸ்லிம்களை யுத்தத்திற்கு வருமாறு அழைத்தனர். இம்முறையாய் அவர்கள் உடன்படிக்கையை மீறினர்.

## 5.10 - மக்காவை கைப்பற்றல்

குறைஷியர் உடன்படிக்கையை மீறிவிட்டனராதலால் ஹிஜ்ரத் எட்டு ரமழான் 20ம் தேதியில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் 10,000 முஸ்லிம் வீரருடன் சென்று இரத்தம் சிந்தாமல் மக்காவைக் கைப்பற்றினார்கள். அங்குள்ளாருக்குச் சர்வ தாராளத்துடனே பெருந்தன்மையான மன்னிப்பை அளித்துவிட்டார்கள். அங்கு சிரங்குனிந்து நின்ற எல்லாக் குறைஷியரையும் நோக்கி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் “சகோதரர்களே! நீங்கள் என்னிலிருந்து எத்தகைய நீதியை எதிர்பார்த்திருக்கிறீர்கள்?” என்று வினவ அவர்களெல்லோரும் “நீர் ஒரு மேலான சகோதரராயிருக்கின்றீர், ஒரு மேலான சகோதரர் புத்திரராயிருக்கின்றீர்” என்று தயங்காது சட்டென விடையளித்தார்கள். 18 வயதுடைய ‘இதாப் இப்னு அஸ்யத்’ என்பவரை மக்காவிற்கு கவர்னராக நியமித்துவிட்டு நபி நாதரும், சகாக்களும், மதீனா சென்று விட்டார்கள். மக்கா

பிடிபட்ட பொழுதுதான் ‘அபூஸுப்யான்’ அவர் மகன் ‘முஆவியா’ அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் தகப்பன் ‘அபூகுஹாபா’ ஆகியோர் இஸ்லாமைத் தழுவினர்.

## 5.11 - ஹுனைன் யுத்தம்

முஸ்லிம்கள் முறிவுற்ற இரு யுத்தங்களில் முந்தியது உஹுத் யுத்தம். இரண்டாவது ஹுனைன் யுத்தமாகும். முந்தியத்தின் கடைசியில் முஸ்லிம்கள் தோல்வியுற்றார்கள். பின்னையதின் கடைசியில் முஸ்லிம்கள் வெற்றிப்பெற்றார்கள். ஹுனைன் போர் ஹிஜ்ரத் 8ம் ஆண்டில் நடந்தது. ‘துகைப்’ ‘ஹவாஸின்’ என்னும் இரு வர்க்கத்தினர் அரபிகளைத் திரட்டிக்கொண்டு, நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தங்கள் சகாக்களோடு மக்கா வெற்றி கொண்டு திரும்பும்போது, தாக்க வந்தனர். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுடன் 10,000 மதீனாவாசிகளும், மக்கா வெற்றிக்கொண்ட பொழுது 2000 முஸ்லிம்களானவரும், முஸ்லிமல்லாத 80 பேர்களும் கொண்ட ஒரு கலப்புச் சேனையிருந்தது. தொகையால் கூடினவராயிருந்தமையால் முஸ்லிம்கள் பகைவரின் சூழ்ச்சிகளைப்பற்றிச் சிறிது கவலையீனமாயிருந்து விட்டனர். எதிரிகள் ஹுனைன் எனும் ஓடையின் நெருக்கமானவோர்

பாகத்தில் மறைந்திருந்து முஸ்லிம்கள் மீது அம்புமாரி பொழிய அன்னோர் திடுக்கிட்டு ஒன்றும் புரியாது தோல்வியுற்று கலைந்து சின்னாபின்னப்பட்டனர். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுடன் பிரபல்யம் வாய்ந்த பெரிய தோழர்களைத் தவிர்த்து, வேறெவரும் இருக்கவில்லை. அப்பொழுது அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் முன் பாய்ந்து தோற்கடிக்கப்பட்டவர்களைக் கூவியழைத்து, தைரியமாய் நின்று எதிர்க்குமாறு உற்சாகப்படுத்தினார்கள். உடனே எல்லோரும் மீண்டும் வந்து பகைவர்களை முறியடித்தனர். பகைவர்களில் 70 பேர் கொல்லப்பட்டனர். எண்ணற்றவர்கள் கைதியாயினர். முஸ்லிம்களில் நான்கு பேர் மாத்திரம் கொல்லப்பட்டனர்.

## 5.12 - தாயிப் யுத்தம்

ஹுனைன் போர் நிகழ்ந்த அன்று குறைஷியரில் ஒரு பகுதியினர் தாயிபுக்குத் திரண்டோடி பாதுகாப்புச் செய்துகொண்டு இருந்துவிட்டனர். முஸ்லிம்களைத் தாக்க ஆயத்தமாய் அன்னோர் இருந்தனராதலால் 19 நாட்கள்வரை நபியவர்களும் சகாக்களும் அவர்களை முற்றுகையிட்டதுடன் ‘ஸல்மானுல் பாரிஸி’ (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆலோசனைக்கிணங்க இயந்திரம் மூலம் முஸ்லிம்கள்

தாக்கினர். முஸ்லிம்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் கொஞ்ச நாட்களின் பின்னர் இவர்கள் அனைவரும் இஸ்லாமைத் தழுவிவிட்டனர்.

## 5.13 - தபூக் யுத்தம்

இது ஹிஜ்ரத் 9ம் வருடம் நிகழ்ந்தது. இதில் ஒரு யுத்தமும் நிகழவில்லை. ஆனால் மழையின்மை, பஞ்சம், வேளாண்மை உண்டாகாமை ஆகியவற்றின் காரணத்தால் மனிதர் வறுமையால் வாடிக்கொண்டிருக்கும் காலமாயிருந்ததால் பணவசூல், இயன்றவரின் உதவி, பணச் செலவு ஆகியவற்றின் முக்கியத்துவத்துக்காக இது எடுத்தெழுதப்படுகிறது. ஸிரியாவில் 'ஹர்கியூலஸின்' தலைமையில் இலட்சக்கணக்கான உரோமப் படைகள் திரண்டு முஸ்லிம்களைக் கடுமையாய்த் தாக்கி அழித்துவிட ஆயத்தமாயிருக்கின்றனர் எனும் செய்தி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்கு எட்டியது. அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் பணம் படைத்த முஸ்லிம்கள் ஏழை முஸ்லிம்களை அதற்காக ஆயத்தப்படுத்த வேண்டுமென ஆக்ஞாபித்தார்கள். (இதுதான் இஸ்லாத்தின் முதலாவது வசூல்) உடனே உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹு) 10,000 தங்கக் காசுகளையும், 300

ஒட்டகைகள் முதலியவற்றையும் சிறிதும் தயங்காது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் சமுகத்திற் குவித்தார்கள். அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் அப்பொழுதிருந்த செல்வம் அனைத்தையும் (4000 வெள்ளிக்காசு) கொண்டுவந்து உதவினார்கள். உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் முதலில் பாதியைக் பதுக்காமல் கொண்டுவந்தார்கள். ஏனைய சீடர்களும் தங்களால் ஆனவற்றைச் செய்தார்கள். அன்று நிகழ்ந்த மற்றொரு முக்கிய சம்பவம் யாதெனில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் சீஷர்களின் பெண்கள் தங்களிடமிருந்த விலையுயர்ந்த நகைகள், ஆபரணங்கள் ஆகியவற்றைப் பட்டாளத்துக்குக் கொடுத்துதவியதாகும். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் 30,000 வீரர்களுடன் தபூக்கை அடைந்தார்கள். அங்கு எதிரிகளின் சேனையை அவர்கள் காணவில்லை. ஆனால் எதிரிகளுக்காக 'யோஹன்னா' என்பவன் வந்து சமாதானம் செய்துகொண்டான். திறை செலுத்துவதென ஓர் உடன்படிக்கையும் செய்துக்கொள்ளப்பட்டது.

# பாகம் 6 – இறுதி ஹஜ்ஜும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் மறைவும்

## 6.1 - அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஹஜ்ஜு

ஹிஜ்ரத் 9 ஆம் வருடம் கடைசிப் பகுதியில் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களை ஹஜ்ஜின் தலைவராய் நியமித்து மனிதர்களைக் கொண்டு ஹஜ்ஜை நடத்துமாறு ஏவி ஹஸ்ரத் அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு 'பறாஅத்' எனும் குர்ஆனின் அத்தியாயத்தில் நின்றும் சில வாக்கியங்களை அம்மனிதருக்கு ஓதுமாறும் கட்டளையிட்டனர். அதன் பயனாய் அந்த வருடத்தின் பின்னர் இணைவைத்து வணங்கும் எவரும் ஹஜ்ஜு செய்யாது ஒழிக்கப்பட்டனர்.

## 6.2 - இறுதி ஹஜ்ஜு

இது ஹிஜ்ரத் 10 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஹிஜ்ரத்துக்குப் பின் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் இதுவன்றி வேறு ஹஜ்ஜு

செய்யவில்லை. அப்பொழுது சுமார் ஒரு இலட்சத்துப் பதினாயிரம் பேர்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுடன் புறப்பட்டு ஹஜ்ஜு செய்யப் போனார்கள். இத்தொகையினால் இஸ்லாம் இக் கொஞ்ச வருடங்களில் எவ்வளவுக்கு பரவியிருந்ததென ஒருவாறு ஊகிக்கலாம்.

## 6.3 - இறுதி ஹஜ்ஜின் குத்பாப் பிரசங்கம்

துல்ஹஜ் 8 ஆம் தேதி மினாவில் இரவு தரித்தப்பின் 9 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அறபாத்தை அடைந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களும் சகாக்களும், அங்கு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தங்கள் சொந்த ஒட்டகத்தின் மீது ஏறினவர்களாய் நிகழ்த்திய பிரசங்கங்கள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தன. அவற்றின் சுருக்கம் பின்வருமாறு:-

"ஜனங்களே! என்னால் உங்கள் மத்தியில் அறிவிக்கப்படும் விஷயங்களுக்குச் செவிமடுப்பீர்களாக! ஏனெனில், இதோ இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் இவ் வருடத்துக்குப் பின் உங்களை நான் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டாமல் போகலாம். நீங்கள் இப்பரிசுத்த நகரையும் இப்பரிசுத்த மாதத்தையும், இப்பரிசுத்த தினத்தையும் எவ்வளவு தூரம்

கண்ணியமாய் மதிக்கின்றீர்களோ அவ்வளவு கௌரவமாக உங்களில் ஒவ்வொருவரினதும் உதிரத்தையும், சொத்தையும், மானத்தையும் மதிப்பீர்களாக! மௌட்டீக காலத்தின் கருமங்களனைத்தும் என் பாதத்தின் கீழ்ப் போடப்பட்டிருக்கின்றன. எவ்விதத்திலாவது நம்பிக்கை காரணமாக வைக்கப்பட்ட பொருள் எதுமிருப்பின் அதை உரியவருக்குக் கொடுத்துவிடுங்கள். ஜனங்களே! விசுவாசிகள் யாவரும் சகோதரராவார். எனவே, உங்கள் சகோதரரின் எப்பொருளையும் அவர் மனமுவந்து தந்தாலன்றி நீங்கள் உபயோகிப்பது முற்றிலும் தவறு. உங்கள் பெண்களை நடத்தும் விஷயத்தில் நீங்கள் ஆண்டவனுக்கு அதிகம் அஞ்சவேண்டும். பெண்கள் ஒழுங்காய் நடத்தப்படுவார்கள் எனும் அல்லாஹ்விடத்து விசுவாசப் பொறுப்புடன் அவர்களை நீங்கள் பெறுகின்றீர்கள். அடிமைகளை அன்பாய் ஆதரியுங்கள். அவர்கள் குற்றம் புரிந்தால் மன்னித்துவிடுங்கள். ஜனங்களே! அரபிகள் அஜமிகளைக் (அரபியல்லாதவர்) காட்டினும் மேம்பட்டவரல்லர். அஜமிகளும் அரபிகளைக் காட்டினும் மேம்பட்டவர்களல்லர். நீங்கள் எல்லோரும் ஆதமின் மக்களே. ஆனால், அந்த ஆதமோ மண்ணிலிருந்து படைக்கப்பட்டார். எனக்குப் பின்னால் நீங்கள் மதம் மாறி உங்களிற் சிலர், சிலரின் கழுத்துக்களைத் திணிக்க வழி செய்து கொள்ளாதீர்கள். எனக்குப் பின்னால் நீங்கள் வழிதவறிப் போகாதிருப்பதற்காக இரண்டு பொருட்களை நான் உங்களிடம் வைத்துவிட்டுச்

செல்கிறேன். அவற்றைப் பலமாகப் பற்றிக்கொள்வீர்களானால் ஒரு போதும் வழி தவற மாட்டீர்கள். அவை, ஒன்று அல்லாஹ்வின் வேதமாகிய அல் குர்ஆன், மற்றது எனது குடும்பத்தினர்."

இறுதியில் பின்வருமாறு அங்கு குழுமியிருந்த முஸ்லிம்களை நோக்கிக் கேட்டார்கள்: "ஆண்டவனால் எனக்கிடப்பட்ட ஊழியத்தை நான் செவ்வனே நிறைவேற்றிவிட்டேனா?" "ஆம்! மிக நன்றாய் நிறைவேற்றி விட்டீர்கள்." என்று எல்லோரும் ஒரே தொனியாக மறுமொழி கூறினார்கள். பின்னர் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தலையை உயரக்கிளப்பி "ஆண்டவனே! இதற்கு நீயே சாட்சி" என்று சொல்லி மீண்டும் அம்மனிதரை நோக்கி "இங்கு சமுகமளித்திருப்பவர்கள் இச்சுப செய்திகளையெல்லாம் சமுகமளியாதோருக்கும் கொண்டு செல்வார்களாக" என்று வேண்டிக்கொண்டார்கள். இந்த ஹஜ்ஜின் போதுதான் கடைசியாக இறங்கிய பின் வரும் வேதவாக்கியங்கள் அருளப்பட்டன. "உங்கள் வேதத்தை இன்று உங்களுக்கு நான் பூர்த்திசெய்து விட்டேன். உங்கள் மீது எனது அருட்கொடையைப் பூரணமாக்கினேன். மேலும் உங்களுக்கு இஸ்லாமையே மனமுவந்து மார்க்கமாக்கித் தந்தேன்." இறுதி ஹஜ்ஜை முடித்துக் கொண்டு மதீனா திரும்பிய நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் 17 வயதுடைய 'உஸாமத் இப்னு ஸெய்து'

என்பவற்றின் தலைமையின் கீழ் ஒரு சேனையைத் தயாரிக்கும் வேளையில் ஈடுபட்டார்கள். முஃதாவுக்குச் சமீபமாகவுள்ள ‘பல்கா’ எனும் பகுதிக்குக் ‘கஸ்ஸான்’ கோத்திரத்தினரோடு யுத்தம் செய்ய அச்சேனையை ஆயத்தப்படுத்தி வைத்தார்கள். இந்த “கஸ்ஸான்” கோத்திரத்தவரான ‘முன்திறு’ எனும் டமஸ்கஸின் தலைவன், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் தூதரைக் கொன்றுவிட்டான் என்பதை நாம் முன்னமே படித்திருக்கிறோம். அதற்காகத் தகுந்த நியாயந்தராது சண்டைக்கு வருவானாயின் அவனோடு யுத்தம் புரிய வேண்டித்தான் இச்சேனையை நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் ஆயத்தப்படுத்தினார்கள். இது ஹிஜ்ரத் 11ம் ஆண்டு நடைப்பெற்றது.

## 6.4 - நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் சுகவீனம்

உஸாமாவின் சேனையை ஆயத்தமாக்கிய பின்னர் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களுக்குச் சுகவீனம் ஆரம்பித்தது. முதலில் தலைவலி தொடங்கியது. நோய் கொஞ்சம் கடுமையான

பொழுது தங்கள் மனைவியரின் அனுமதி பெற்றபின் ஆயிஷா நாயகியின் வீட்டிலேயே இருந்தார்கள். காய்ச்சலின் கடுமையை இலேசாக்குவதற்குக் குளிர்ந்த நீரைத் திருமேனியில் ஊற்றச் சொன்னார்கள். கூட்டுத் தொழுகையை நிறைவேற்றப் பள்ளிவாயிலுக்குப் புக அறவே முடியாத சமயத்தில் தோழர் அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு அதை நடத்துமாறு கட்டளையிட்டார்கள். இப்படிப் பதினேழு தொழுகைகளை அபூபக்கர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தொழுதார்கள். ஆனால் 'அன்ஸார்கள்' நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் சந்நிதானத்தை நினைத்து அழுது முறையிட்டதன் காரணமாய் அலி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் மீது சாய்ந்தவர்களாய் 'பழுல், அப்பாஸ்' (ரலியல்லாஹு அன்ஹு) ஆகியவர்கள் முன்னாள் தாங்கிக் கொண்டு போக நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் பள்ளிவாசலுக்குள் புகுந்து மிம்பரின் (பிரசங்க மேடை) முதற்படியில் இருந்துகொண்டிருக்க, மனிதர்கள் எல்லோரும் அங்கு குழுமினர். அப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் ஒரு பிரசங்கம் புரிந்தார்கள். அதில் சில விஷயங்கள் வருமாறு:- "ஜனங்களே! உங்கள் நபியின் மறைவை நினைத்து நீங்கள் அச்சமுறுகிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். எனக்கு முன்வந்த நபிமார்களில் எவரேனும் சதா ஜீவித்துக்

கொண்டிருந்தார்களா? அப்படி அவர்கள் ஜீவித்திருப்பின் நானும் உங்களுடன் நீடூடி காலம் ஜீவித்திருக்கலாம். அறிந்து கொள்ளுங்கள்! நான் என் இரட்சகனை அடையப் போகிறேன். நீங்களும் என்னை வந்தடைவீர்கள். மக்காவைத் துறந்து வந்த முஹாஜிர்களுக்கு நன்றி செய்யுமாறு நான் உங்களுக்கு நல்லுபதேசம் புரிகின்றேன். மக்கள் நன்றியுடையோராயிப்பின் தலைவர்களும் அவர்களுக்கு நன்றி செய்வர். மக்கள் தீமை விளைவிப்பவராயின் தலைவராலும் அதைத்தான் எதிர்ப்பார்க்கலாம்."

## 6.5 - மறைவு

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் தங்களின் 63வது வயதில் ஹிஜ்ரத் 11ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் 12ஆம் திகதி மத்தியானம் பிராட்டியார் ஆயிஷாவின் வீட்டில் அன்னாரின் மடியிலேயே தலை வைத்தவர்களாய் இவ்வுலகை விட்டு பிரிந்தனர். அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

# பாகம் 7 – நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்களின் சில வருணனைகளும், குணங்களும்


நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் சிவப்பு நிறங் கலந்த வெண்மை நிறமுடையவர்களாகவும், அழகில் நிகரற்றவர்களாகவும், நடுத்தர உயரமும், நடுத்தர பருப்பமும் உடையவர்களாகவும் இருந்தார்கள். தலைமயிர் நன்கு கருப்பையும், விசாலமான கண்களையும், விரிந்த நெற்றியையுமுடையவர்களாகவும் கண்களின் வெண்பாகையின் ஓரங்களில் ஓர் இலேசான சிவப்புக் கலந்தும் இருக்கும். நேரிய முகமும், நேரிய மூக்கும் ஒழுங்கான பற்களும் அடர்ந்த தாடியும் அழகிய உயர்ந்த கழுத்தும் அகன்ற நெஞ்சும் மரியாதைக்குரிய தோற்றமும் அமைந்தவர்கள். சாந்த குணமும், தயவிரக்கமும், மிகக் கூரிய புத்தியும், உண்மையும், உறுதி வாக்கும், நேர்மையும், ஈகையும் உடையவர்கள். நற்குணங்களில் இவர்களை ஒப்பாரும், மிக்காரும் யாரும் இல்லை. வேலைக்காரரையோ, மனைவிமார்களையோ, ஒருபோதும் அவர்கள் அடித்ததில்லை. உயர்ந்த பதவியிலிருந்தும் சகாக்களின் சபைக்குப் போவார்களானால் சபையின் கடைசியில்தான் போய் உட்காருவார்கள். இரப்போர்க்கு ஈந்துவிட்டுத் தாங்கள் பட்டினியிருப்பார்கள். தீமை செய்வோரைச் சாபம் இடும்படி தோழர் கூறின் “நான்

உலகோர்க்கு கருணைக்கு அனுப்பப்பட்டேனேயன்றி அவர்களைச் சபிக்கவன்று" என்பார்கள். பரம சத்துருக்கள் மீதும் இரக்கங் காட்டுவார்கள். மக்கா சரணடைந்தபோது பழிக்குப் பழிவாங்காது மன்னித்துவிட்டார்கள். தங்கள் ஆடையைத் தாங்களே கழுவிக் கொள்வார்கள். சிலர் சந்தையிலிருந்து சாமான்களைச் சுமந்து கொண்டுவரக் கேட்பார்கள். நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் கொடுக்கமாட்டார்கள். மற்றும் நபிமார்களைப் போலன்றி அவர்களின் ஒவ்வொரு சரித்திரம், செய்கை, சொல் முதலியன யாவும் தெளித்தெடுத்து வரையப்பட்டிருக்கின்றன. உலகில் வேறொருவரின் சரித்திரமும் இதுபோல் வரையப்படவில்லை.

இந்த விண்ணகமும் மண்ணகமும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் மீது அல்லாஹ் சலவாத்தும் ஸலாமும் சொல்வானாக...

## ஸல்லல்லாஹு அலா முஹம்மத்

## ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்




ஏனைய நபிமார்கள், சஹாபாக்கள், வலிமார்கள் சரிதைகளை எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com